NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p2
**Date:** 16 August 2022

# மின்னியல் முறையில் சிங்கப்பூரின் இயற்கை வரலாற்று ஆவணங்கள்

சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகத்தின் லீ கோங் சியான் இயற்கை வரலாற்று அரும்பொருளகமும் லண்டனில் உள்ள இயற்கை வரலாற்று அரும்பொருளகமும் இணைந்து இம்மாதம் 10ஆம் தேதி, 'புரோஜெக்ட் சிக்னிஃபை' எனும் முயற்சியைத் தொடங்கியுள்ளன.

சிங்கப்பூரில் கடந்த 200 ஆண்டுகளாகக் காணப்படும் உயிரியல் பன்முகத்தன்மையின் வரலாற்றை மின்னிலக்க முறையில் ஆவணப்படுத்தும் திட்டம் இது.

ஐந்தாண்டுகளில் உலகெங்கும் உள்ள அரும்பொருளகங்களில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள 10,000 வரலாற்றுச் சிறப்புமிக்க மாதிரிகள் குறித்த தகவல்களை ஆவணப்படுத்தி இணையத்தில் பதிவேற்றுவது இதன் இலக்கு.

Source: Tamil Murasu © SPH Media Limited. Permission required for reproduction.